Aparajitha

தளிர்த் திறன் திட்டம்

# வெற்றியின் விதைகள்

சனவரி
2018

25



| பொருள் | பக்கம் |
|---|---|
| வணக்கம்! | 2 |
| பதிவுகள் | 3 |
| சுவடுகள் | 7 |
| எதிரொலிகள் | 8 |

அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி. இரத்தினசாமி சாலை
பீபிகுளம்
மதுரை 625 002
www.aparajitha.org
0452-4375252
info@aparajitha.org

செய்திமடல்
தனிச்சுற்றுக்கு மட்டும்

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

# வணக்கம்!

"ஒரு விளக்கு  மற்றொரு விளக்கை ஏற்றுவதைப்போல ஒரு நல்ல கவிதை மற்றொரு கவிதையை உருவாக்கும்" என்பார் கவிஞர் அப்துல்ரகுமான். அதனைப்போல, "ஓர் அறிவு மற்றோர் அறிவை அறிய உதவும்; ஒரு முயற்சிக்கு மற்றொரு முயற்சி துணை நிற்கும்; ஓர் ஆக்கம் மற்றோர் ஆக்கமாய் மலரும்; ஒருவரின் பட்டறிவு மற்றொருவருக்குக் கற்றல் அறிவாய் மாறும்" என்று தளிர்த்திறன் திட்டத்தின் பரிமாணங்களை அறியும்பொழுது கூறத் தோன்றுகிறது. அக்கூற்றைத்தான் இந்த இதழ் விளக்குகிறது.

தளிர்த் திறன் திட்டம் வழங்கும் அறிவு அரவிந்தர் நல்கிய அறிவைப் புரிந்துகொள்ள எங்ஙனம் உதவியது என்பதை இவ்விதழின் முதற்பதிவும் தளிர்த் திறன் திட்டம் என்னும் முயற்சி தமது ஊரை ஒளிரச் செய்ய வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எங்ஙனம் உதவுகிறது என்பதை இரண்டாம் பதிவும் தளிர்த்திறன் திட்டம் என்னும் ஆக்கம் கல்லூரி விரிவுரையாளர்களுக்கான பயிலரங்கக் கலைத்திட்டத்தை ஆக்க எங்ஙனம் உதவியது என்பதை இவ்விதழின் மூன்றாவது பதிவும் எடுத்துரைக்கின்றன.

தளிர்த்திறன் திட்டத்தைச் செயற்படுத்தியதால் பெற்ற பட்டறிவு மற்றொரு மாநிலத்தில் செயற்படுத்துவதற்கான கற்றலாய் எங்ஙனம் மாறுகிறது என்பதை எடுத்துரைக்கிறது இவ்விதழின் சுவடுகள் பகுதி.

படியுங்கள் . . . உங்களின் கருத்துகளைப் பகிருங்கள் . . .

தொடர்ந்து உங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*

*மேலாளர்*



*தளிர்த் திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.  தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா ஆகிய ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி ஒன்றியப் பரவிலும் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

# ஆய்வுக்களத்தில் தளிர்த்திறன் திட்டம்

"ஒன்றைப் பற்றி நம்முடைய புரிதலை வளர்த்துக்கொள்வதற்காக தகவல்களைத் திரட்டி, பகுத்ததாயும் படிநிலைகளே ஆய்வு" என்கிறார் ஜான் டபிள்யூ க்ரெஸ்வெல். "ஆய்வு என்பது புதிய அறிவைக் கண்டறியும் செயல்முறை" என்கிறது மற்றொரு வரையறை. அவ்வகையில் "ஒரு மனிதனுக்கு அடிப்படையாக விளங்குவது பண்பு. பண்பின் அடிப்படையில்தான் ஒரு மனிதனை உயர்ந்தவனாகவும் தாழ்ந்தவனாகவும் சமுதாயம் மதிப்பிடுகிறது" என்னும் அரவிந்தரின் கருத்தை, தளிர்த்திறன் திட்டப் பாடங்களின் வழியாகப் புரிந்துகொள்ளும் முயற்சி பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள ஆரோவில் கிராமத்தில் இயங்கும் இசையம்பலம் பள்ளியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. அப்பள்ளியின் நிர்வாகி திருமிகு சுபாஷ் அவர்களின் வழிகாட்டலில் அப்பள்ளியில் பணியாற்றும் 7 ஆசிரியர்களும் மூன்றாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை பயிலும் 25 மாணவர்களும் அந்த ஆய்வில் ஈடுபட்டனர். அந்த ஆய்வு முயற்சியின் செயல்முறைகளையும் கற்றல்களையும் கண்டறிந்தவைகளையும் தொகுத்து 60 பக்க அறிக்கையை உருவாக்கியிருக்கின்றனர். அவ்வறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:

*ஒருவரின் ஞானம் (Wisdom), வலிமை (Strength), இசைவு (Harmony), நிறைவு (Perfection) என்னும் நான்கு கூறுகளின் வழியாக அவரின் பண்புகள் வெளிப்படுகின்றன என "அன்னை" என்னும் நூலில் அரவிந்தர் விளக்குகிறார். அதனை நன்கு புரிந்துகொள்வதற்காக தளிர்த் திறன் திட்டத்தின் இலக்கமைத்தல், நினைவாற்றல், உரையாடல், மனவழுத்தத்தைக் கையாளுதல், நல்லறுதி, தடைகளைத் தகர்த்தல், விடாமுயற்சி, தன்னம்பிக்கை, அணியாகச் செயல்படுதல், மாற்றுக்கருத்தை முரண்பாடின்றித் தெரிவித்தல், எதிர்மறை உணர்வுகளைக் கையாளுதல், நட்பு, பகிர்தல், உண்மையால் வெல்லல், விமர்சனங்களை எதிர்கொள்ளல், பதட்டத்தைக் கையாளுதல் ஆகிய பாடங்களை அரவிந்தரின் கருத்துகளோடு பொருத்திப் பார்த்து தம் வாழ்வில் பின்பற்றும் முயற்சியில் 7 ஆசிரியர்கள் ஈடுபட்டனர். அதன் விளைவாக அப்பண்புகளை அவர்கள் தம்முள் வளர்த்து, அவற்றைத் தக்கவைத்துள்ளனர்.*

*இதேபோல மாணவர்களும் பேசிப்பழகுக, பகிர்ந்து பழகுக, எதிர்மறை உணர்வுகளை எதிர்கொள்ளப் பழகுக, இலக்கை அமைத்திடப் பழகுக, விடாமுயற்சியால் வெல்லப் பழகுக, பதட்டத்தைக் கையாளப் பழகுக, நட்பு பாராட்டிப் பழகுக, தன்னம்பிக்கையால் வெல்லப் பழகுக, நல்லுறுதி கொள்ளப் பழகுக ஆகிய தளிர்த்திறன் திட்டப் பாடங்களை அரவிந்தரின் பண்புகள் பற்றி கருத்தோடு பொருத்திப் பார்த்து அக்கருத்தை புரிந்துகொண்டுள்ளனர். அப்பண்புகளை தம்முள் வளர்த்து, தக்கவைத்துள்ளனர்.*

இதன் விளைவாக பண்புகள் பற்றிய அரவிந்தரின் கருத்தையும் உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டுள்ள பத்து வாழ்க்கைத்திறன்களையும் புரிந்துகொண்டு அவற்றைத் தத்தம் வாழ்வில் பின்பற்றி தனது கற்றலுக்குத்தானே பொறுப்பேற்றல், தன்னுடைய கற்றலை தானே வழிநடத்திக்கொள்ளல், வேலையைத் தரமாகச் செய்தல், நற்பண்புகளை அடைதல், புதியனவற்றை ஆர்வத்தோடு கற்றல், சமுதாயத்தில் இணைந்து பொறுப்புடன் செயற்படுதல், குழுவாக இணைந்து செயற்படுதல் ஆகிய 7 குணநலன்களையும் பெற்றிருக்கின்றனர். அதற்கு தளிர்த்திறன் திட்ட திரைப்பாடங்கள் உதவியிருக்கின்றன. அவ்வாய்வினைப்போல பிற துறைசார்ந்த சிந்தனைகளையும் தளிர்த்திறன் திட்ட உள்ளடக்கங்களின் வழியாகப் புரிந்துகொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# ஒளிரும் ஈரோடு!

சமூகம், பொருளாதாரம், அறிவு ஆகியவற்றில் சிறந்த நகரமாக தமிழ்நாட்டிலுள்ள ஈரோடு நகரத்தை மாற்றும் நோக்கில், அந்நகரிலுள்ள நிறுவனங்கள் பல இணைந்து "ஒளிரும் ஈரோடு அறக்கட்டளை" என்னும் அமைப்பை உருவாக்கியிருக்கின்றன. இந்நோக்கினை அடைய வாழ்வின்தன்மையை மேம்படுத்துதல், பசுமைச்சூழலை உருவாக்குதல், உள்கட்டமைப்பின் நிலையைமாற்றுதல், தரமான கல்வியையும் நலவாழ்வையும் சாத்தியமாக்குதல், ஈரோட்டின் மரபையும் பண்பாட்டையும் மீண்டும் பொலிவுறச் செய்தல் ஆகிய ஐந்து தளங்களில் இவ்வமைப்பு செயற்பட்டு வருகிறது.

இப்பேரிலக்கின் ஒரு கூறாக ஈரோடு நகரில் அமைந்துள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, அபராஜிதா அறக்கட்டளையின் தளிர்த்திறன் திட்டத்தின் வழியாக, வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்க விரும்பியது. எனவே, அதற்கான வெள்ளோட்டத்தை பெரியவலசு பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கடந்த கல்வியாண்டில் செயற்படுத்தியது. அம்முயற்சியின் விளைவாக அம்மாணவர்களிடம் பல்வேறு நடத்தை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.







எடுத்துக்காட்டாக, எட்டாம் வகுப்பு மாணவியான விஷ்ணுப்ரியா தனக்குள் ஏற்பட்டிருக்கும் சிந்தனை மாற்றத்தை, "முன்பெல்லாம் உடன்படிக்கும் மாணவர்களோடு பேசமாட்டேன். வாழ்க்கைத்திறன் வகுப்பில் பாலின நிகர்நிலைப் திரைப்பாடத்தைப் பார்த்து ஆணும் பெண்ணும் சரிசமமே; அவர்களுக்கிடையே உடலமைப்பில் மட்டுமே வேறுபாடு இருக்கிறது என புரிந்துகொண்ட பின்னர் உடன்பயிலும் மாணவர்களிடம் நட்பாகப் பேசுகிறேன்" என எடுத்துரைக்கிறார். இதோ திரைப்பாடத்தைப் பார்த்துக்கற்ற ஏழாம் வகுப்பு மாணவியான தாரணி, "எங்களது வீட்டில் இரண்டு பெண்பிள்ளைகள். இதனால் எங்கள் அம்மா 'ஆண்பிள்ளை இல்லையே' என வருந்துவார்கள். அவர்களிடம், 'அம்மா, ஆண் உயர்வு; பெண் தாழ்வு எனச் சொல்லாதீர்கள். ஆணும் பெண்ணும் சரிசமம்தான்; நான் வளர்ந்து பெரியவளாகி உங்களைப் பார்த்துக்கொள்வேன்' என்றேன். அதனைக் கேட்டு அம்மா மகிழ்ந்தார்" என தனக்குள் ஏற்பட்ட மாற்றத்தைப் பதிவுசெய்கிறார்.






"முன்னர் விளையாட்டுத்தனமாக இருப்பேன்; வீட்டுப்பாடங்களைச் செய்ய மாட்டேன். காலத்தைக் கையாளப் பழகுக திரைப்பாடம் பார்த்த பின்னர் நேரத்தை வீணாக்கக்கூடாது எனத் தோன்றுகிறது என்கிறார் எட்டாம் வகுப்புப் பயிலும் சங்கீதா. அத்திரைப்பாடத்தைக்கற்ற மற்றொரு மாணவரான சச்சின், "முன்னர் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டும் யாருடனாவது சண்டைபோட்டுக்கொண்டும் இருப்பேன். இப்பொழுது எனக்குப் பிடித்த அறிவியல் சோதனைகளில் ஈடுபடுகிறேன்" என்கிறார்.

ஆசிரியர் திருமிகு ஏஞ்சலின், "வேலைக்குச் செல்லும் பெற்றோர் இரவு ஒன்பது மணிக்கே வீடுதிரும்புவார்கள்; எனவே மாலைநேரத்தில் வீட்டிற்குத்திரும்பும் குழந்தைகள் தொலைக்காட்சியில் அவர்களுக்குப் பொருத்தமற்ற பல நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். இதனால் அவர்களுடைய பேசுமொழியே மாறிவிட்டது. இந்நிலையில்தான், 'பண்படப் பழகுக' திரைப்பாடத்தை இவர்கள் பார்த்தார்கள். அதன்பின்னர் இவர்களது நடத்தையில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றங்கள் ஏற்படுகின்றன. 'காலத்தைக் கையாளப்பழகுக' என்னும் திரைப்பாடத்தை பார்த்துக்கற்ற பின்னர், இந்த இந்த நேரத்தில் இந்த இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்னும் பழக்கம் உருவாகியிருக்கிறது" என்கிறார்.







தளிர்த்திறன் திட்ட திரைப்பாடங்களை பார்த்துக்கற்ற பின்னர் மாணவர்களிடம் சுயகட்டுப்பாடும் ஒழுக்கமும் வளர்ந்திருக்கின்றன என்கிறார் ஆசிரியர் திருமிகு கீதா.




"ஆண்களும் பெண்களும் பழகும்விதமே மாறியிருக்கிறது; முன்னர் பெண்களை கிண்டல் செய்வார்கள். இப்பொழுது அப்பழக்கம் மாறிவிட்டது. யாரேனும் ஒரு மாணவன் கிண்டல் செய்தால் வேறொரு மாணவன் அவனைக் கண்டித்து நெறிப்படுத்துகிறான். தாமாக முன்வந்து அணியாகச் செயல்பட்டு வேலைகளைச் சிறப்பாகச் செய்கிறார்கள்" என்கிறார் தலைமையாசிரியர் அன்புச்செல்வி.

இப்பள்ளியில் ஏற்பட்டிருக்கும் இத்தகு நல்விளைவுகளை ஈரோடு நகரிலுள்ள பிற பள்ளிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என விரும்பி, இத்திட்டம் இக்கல்வியாண்டில் நடுநிலைப்பள்ளிகளுக்கும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

# கல்லூரி விரிவுரையாளர்களுக்கான பயிலரங்கில் தளிர்த்திறன் திட்டம்

பள்ளி ஆசிரியராகவும் பெருநிறுவனங்களில் பயிற்றுநராகவும் பல்லாண்டுகள் பணியாற்றிய பட்டறிவுடைய திருமிகு உஷா லாசரஸ், மதுரையிலுள்ள சி.எஸ்.ஐ. பெண்கள் கலை, அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளார், அப்பணியை தளிர்த்திறன் திட்டத்தின் வழியாக நிறைவேற்ற விழைந்தார். எனவே, இத்திட்டம் கல்லூரி மாணவர்களுக்குப் பொருத்தமாக இருக்குமா என்பதனை அறிந்துகொள்வதற்காக இக்கல்லூரி ஆசிரியர்களுக்கு சோதனை முயற்சியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தளிர்த்திறன் திட்ட திரைப்பாடங்கள் சிலவற்றை தனது பயிலரங்கில் பயன்படுத்தினார். அப்பொழுது அவர்பெற்ற அனுபவத்தை இங்ஙனம் பகிர்ந்துள்ளார்:

*"எங்களது கல்லூரியில் பணியாற்றும் விரிவுரையாளர்களுக்கான மூன்றுநாள் மேம்பாட்டுப்பயிற்சிக்கு ஆயத்தமாவதற்காக தளிர்த்திறன் திட்டக் காணொளிகளைப் பார்த்தபொழுது, இப்பயிற்சி பெரும் வெற்றியை அடையுமென உறுதியாக உணர்ந்தேன்.*

*இக்காணொளிகள் பள்ளி மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டவை என்பதனை நான் அறிந்திருந்ததனால், இவற்றை எங்களது பயிற்சியில் பயன்படுத்துவதுபற்றி சற்று உறுதியற்று இருந்தேன். எனவே தோற்றத்தைப்போற்றிப் பழகுக, மனவழுத்தத்தைக் கையாளப் பழகுக, உறவுகளைப்போற்றிப் பழகுக, மாற்றுக்கருத்தை முரண்பாடின்றி தெரிவிக்கப் பழகுக ஆகியன போன்ற தலைப்புகளிலான காணொளிகள் சிலவற்றை எங்களது பயிலரங்கில் பயன்படுத்த முடிவுசெய்தேன். விரிவுரையாளர்களிடம் நான் பகிர்ந்துகொள்ளத் திட்டமிட்டிருந்தவற்றை இக்காணொளிகள் எடுத்துரைக்க வாய்ப்பில்லை என முதலில் மிகவும் உறுதியாக நினைத்தேன். ஆனால், அவற்றில் இருப்பவைகளைப் புரிந்துகொள்வதற்காக அவற்றைக் காணத் தொடங்கினேன். பெரியவர்களான விரிவுரையாளர்களுடன் பகிர்ந்துகொள்வதற்காக நான் திட்டமிட்டிருந்த செய்திகளை, படிப்படியாக இக்காணொளிகள் எடுத்துரைத்தன. அதுவரை இக்காணொளிகள் சிறுவர்களுக்கு மட்டுமே பொருத்தமானவை என நினைத்துக்கொண்டிருந்தேன்; ஆனால், அது பிழை! தளிர்த்திறன் திட்ட அணியினர் ஒரு தலைப்பின் ஒவ்வொரு கருத்தையும் விழிப்பாகச் சிந்தித்து அப்பாடத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆழமாக செய்திகளைப் பள்ளி மாணவர்களின் வயதைக் கருத்திற்கொண்டு - பாடத்திற்கு இடையே பாடல்கள், செயற்பாடுகள் ஆகியவற்றை இணைத்து - உருவாக்கியிருக்கிறார்கள் என்பதனைப் புரிந்துகொண்டேன்.*

*சுருக்கமாய்ச் சொன்னால், அக்காணொளிப் பாடங்களில் பட்டியலிடப்பட்டுள்ள தொகுப்புரைகளைப் பயன்படுத்தி எங்களது பயிலரங்கில் கலந்துரையாடினோம். இதனால் அப்பயிலரங்கம் பெருவெற்றி பெற்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அப்பயிலரங்கில் பங்கேற்ற விரிவுரையாளர்கள் ஒவ்வொருவரும் தாம் நல்வாய்ப்புப்பெற்றதாகத் தெரிவித்தனர். அவர்கள் அனைவரும் இதுபோன்ற பயிலரங்குகளைத் தொடர்ந்து ஒருங்கிணைக்க வேண்டுமெனக் கோரினர். ஆகவே, தளிர்த் திறன் திட்ட அணியினருக்குப் பாராட்டுகள்!*

# சுவடுகள்

*(2017 அக்டோபர் முதல் திசம்பர் வரையிலான நிகழ்ச்சிகள்)*

## அரியானா மாநிலத்தில் . . .

அரியானா மாநில அரசுக்கும் அபராஜிதா அறக்கட்டளைக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அம்மாநில இடைநிலைக் கல்வி இயக்குநர் திருமிகு இராஜீவ் ரத்தன், உதவி இயக்குநர்கள் திருமிகு நந்த கிஷோர் வர்மா, திருமிகு குல்தீப் மேத்தா, திட்ட அலுவலர்கள் திருமிகு பிரமோத் குமார், திருமிகு பிரியங்கா ஆகியோரின் முயற்சியால் கடந்த இரண்டு மாதங்களில் 244 பள்ளிகளில் தளிர்த் திறன் திட்டத்தின் இந்தி வடிவமான டிம் டிம் தாரே தொடங்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல்வேறு பள்ளிகளில் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை செம்மையாக நிறைவேற்றும் நோக்கில் 2017 திசம்பர் 11, 12, 13 ஆகிய நாள்களில் அம்பாலா மாவட்டத்திலுள்ள 160 பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் 21, 22 ஆகிய நாள்களில் பஞ்ச்குலா மாவட்டத்திலுள்ள 84 பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வாழ்க்கைத்திறன் கல்வி, டிம் டிம் தாரே ஆகியன பற்றி பயிற்சிகள் வழங்கப்பட்டன. வரும் நாள்களில் பிற மாவட்டங்களிலும் இதேபோன்ற பயிற்சியை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## விளைவினை அறிந்தேன் . . .



மத்தியப்பிரதேசம் இந்தூர் மண்டலத்தில் டிம் டிம் தாரே திட்டம் செயற்படுத்தப்படுகிறது, அதனைச் செயற்படுத்தும் பொறுப்பையேற்றிருக்கும் திட்ட அலுவலர் திருமிகு ஆனந்த் மிஸ்ரா இத்திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயற்படுத்த விரும்புகிறார். எனவே, 2017 நவம்பர் 16, 17ஆம் நாள்களில் அவர் குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரிலும் அருகிலுள்ள கிராமங்களிலும் தளிர்த் திறன் திட்டத்தின் குஜராத் வடிவமான டிம் டிம் தாரா எங்ஙனம் செயற்படுகிறது என்பதை உற்றுநோக்கவும் அத்திட்டத்தால் மாணவர்களிடம் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை அறிந்துகொள்ளவும் வருகை தந்தார். அங்குள்ள அரசுப்பள்ளிகள், தனியார் பள்ளிகள், இந்திவழிப் பள்ளிகள், ஆங்கிலவழிப் பள்ளிகள் என பல்வேறு வகையான பள்ளிகளுக்குச் சென்று மாணவர்கள், ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் ஆகியோரிடம் கலந்துரையாடினார்; மாணவர்களே டிம் டிம் தாரா வகுப்புகளை வழிநடத்துவதை உற்றுநோக்கினார். அப்பயணத்தின் முடிவில் திருமிகு ஆனந்த் மிஸ்ரா, "டிம் டிம் தாரா திட்டத்தால் மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் விளைவுகளை உணர்கிறேன். இந்தூரில் டிம் டிம் தாரேவை மேலும் நன்கு செயற்படுத்த முயற்சிகளை மேற்கொள்வேன்" என்று உரைத்தார்.

# எதிரொலிகள்

அரியானாவிலும் இராஜஸ்தானிலும் காலடிபதித்திருப்பதற்கு பாராட்டுகள்! மென்மேலும் இதுபோன்ற பல வெற்றிச்செய்திகளையும் பின்னூட்டங்களையும் பெற வாழ்த்துகள்!

*- இரா. தினேஷ்*
*இணை மேலாண்மை இயக்குநர்,*
*டி.வி.எஸ் & சன்ஸ் (பி) லிமிடெட், மதுரை.*

செயற்கை நுண்ணறிவை (Artificial Intelligence) உள்ளடக்கிய தொழில்நுட்ப வளர்ச்சிகளால் இயந்திரத்தனமான வேலைகளை (எடுத்துக்காட்டாக கணக்குப்பதிவியல், செயலாண்மை முதலியன) வழங்கும் அடிப்படைப் பட்டப்படிப்புகள் தமது பொருத்தப்பாட்டை மெல்ல மெல்ல இழந்துவருகின்றன. செயற்கை நுண்ணறிவு பல அடிப்படையான வெள்ளுடைப் பணிகளுக்கு (White colour jobs) முக்கியமான அச்சுறுத்தலாக இருக்கிறது.

எனவே, நம் இளைஞர்களுக்கு மிகவும் முற்போக்கான கல்வியை இப்பொழுது வழங்க வேண்டியிருக்கிறது. அப்பொழுதுதான் அவர்கள் தாமாகவே பிறருடன் பழகுதல் போன்ற மென்திறன்களிலும் (Soft skills) குழாய்ப்பழுதுநீக்குநராக (Plumber) தச்சராக இருத்தல் போன்ற தொழிற்திறன்களிலும் தொழில்தொடங்கும் திறன்களிலும் சிறப்புத்தகுதியைப் பெறமுடியும்.

இத்திசையில் வாழ்வின் தொடக்கநிலையிலேயே வழங்கப்படும் தளிர்த் திறன் திட்டம் போன்ற வாழ்க்கைத் திறன் கல்வித் திட்டம், இளைஞர்களை அவர்களுக்கு ஆர்வமுள்ள துறைகளில் (மனச்சிக்கல்களை உதறியெறிந்து, தொழிற்கண்ணியத்தை பாராட்டக் கற்று) தம் அடையாளத்தை அறிந்து அதில் உயர உதவுகிறது,

*- திமந்த் & தேவாஞ்சி*
*சிங்கப்பூர்*

செயல்திறனோடு 'ஒப்பானவர் கற்பித்தல்' முறை நிகழ்த்தப்பட்டால், கடும்வேலைப்பளுவைச் சுமக்கும் ஆசிரியர்களுக்கு மிகச் சிறந்த நடைமுறைத் தீர்வாக இருக்கும், 'தொலைத்தவையும் கண்டுபிடித்தவையும்' பெட்டி புதிய சிந்தனை; அது சிறப்பாகச் செயல்படுவதை அறிந்து மகிழ்ச்சி,

*- முனைவர் எஸ். இராதாகிருஷ்ணா*
*ஐத்திராபாத்*

இத்திட்டம் இந்த அளவிற்கு விரிந்தும் பரந்தும் வளர்ந்திருப்பதைக் காண மிகவும் மகிழ்ச்சி. பாராட்டுகள்!

*- சோபா நாராயண்*
*எழுத்தாளர், பெங்களூரு*

பள்ளி மாணவர்கள் ஒப்பானவர் கற்பித்தல் முறையில் கற்பதை அறிந்து வியந்தேன். டிம் டிம் தாரா திட்டத்தால் மாணவர்களின் திறனும் சிந்தனை ஆற்றலும் மேம்பட்டிருக்கிறது என்பதை புரிந்துகொண்டேன். பாராட்டுகள்!

*- இரா. செல்வம்*
*மேலாளர், அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட், மதுரை.*